# சோதோம் கொமோரா



**சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப்போட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் திருஷ்டாந்தமாக வைத்து; (2 பேதுரு 2 : 6)**

சோதோம் கொமோராவின் அழிவு, பிற்காலத்தில் நடக்க போகும் நியாயத்தீர்ப்பின் நாளின் காரியங்களுக்கு ஒரு திருஷ்டாந்தமாய் உள்ளது, என்று அப்போஸ்தலனாகிய பேதுரு தன் நிருபத்தில் எழுதுகிறார். இதனை தெளிவாக 2 பேதுரு 2:4-9 வசனங்களில் **“பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து;பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி; சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப்போட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் திருஷ்டாந்தமாக வைத்து; அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் அவர்களுடைய காமவிகார நடக்கையால் வருத்தப்பட்டு;நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க; கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்.“** காணலாம். இங்கு சோதோம் கொமோராவின் அழிவிற்கு காரணம், அதில் குடியிருந்த மக்களின் அக்கிரம செயல்களே என்பதை நாம் அறிவோம். **வசனம் 5** தில் நோவாவின் காலத்தில் உலகம் ஜலத்தினால் அழிக்கப்பட்டதை காணலாம். ஆனால் இனி உலகம் அழிக்கப்பட போவதோ அக்கினியினால். அதற்கு

அடையாளமாகவே சோதோம் கொமோராவின் அழிவு காணப்படுகிறது. இதனை நாம் **2 பேதுரு 3:3-7** வசனங்களில், "**முதலாவது நீங்கள் அறியவேண்டியது என்னவெனில்: கடைசிநாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து, அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின்தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள். பூர்வகாலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமியும் உண்டாயினவென்பதையும், அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது.**" காணலாம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் நியாயத்தீர்ப்பை பற்றி பேசும் பொழுதெல்லாம் சோதோம் கொமோராவை பற்றி குறிப்பிடுவதை காணலாம் (**லூக்கா 10:12, மாற்கு 6:11**).

மேலும் **யூதா 6,7** வசனங்களில், "**தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்துவைத்திருக்கிறார். அப்படியே சோதோம் கொமோரா பட்டணத்தார்களும், அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும், அவர்களைப்போல் விபசாரம்பண்ணி, அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து, நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்.**". எனவே சோதோம் கொமோராவின் பாவம், உலகத்தின் முடிவில் வரப்போகும் அக்கிரம காலத்திற்கு அடையாளமாய் உள்ளதை மேற்கண்ட வசனங்களின் மூலம் தெளிவாக காணலாம். அன்று சோதோம் கொமோராவிலே காணப்பட்ட பாவம், இன்று பூமி முழுவதும் பெருகி போய் இருப்பதை நாம் கண்கூடாக காணலாம். ஆனால் **2 பேதுரு 2:8,9** வசனங்களில் கூறப்பட்டுள்ளபடி, இந்த பொல்லாத சோதோம் கொமோராவிலே இருக்கும் நீதிமானாகிய லோத்தை வெளியே வரபண்ணின பிறகே சோதோம் கொமோராவின் அழிவு ஏற்பட வேண்டும். அதேபோல் இந்த பொல்லாத உலகில் வாழும் நம்மையும், ஆண்டவர் நிச்சயம் இப்பூமியிலிருந்து மீட்டு தம்மண்டை சேர்த்துக் கொள்வார். அதன் பிறகே அதன் அழிவு வரும். ஆனால் உண்மையில் இந்த சோதோம் கொமோரா எப்படி இருந்தது என்பதை, **ஆதியாகமம் 13:10** இல், "**அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து: யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்கண்டான். கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்கும்முன்னே, சோவாருக்குப் போம் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும் எகிப்து தேசத்தைப்போலவும் இருந்தது.**" என்று காணலாம். அது கர்த்தருடைய தோட்டத்தைப் போல இருந்தது என்று வேதமே சாட்சி இடுகிறது. இந்த உலகமும் அவ்வாறே, ஏதேனாகிய கர்த்தருடைய தோட்டத்தை தான் கொண்டிருந்தது. ஆண்டவர் எல்லாவற்றையும் நன்மையும்,

செம்மையுமாகவே படைத்தார். ஆனால் கர்த்தருடைய தோட்டத்தை போல் செழிப்பாய் இருந்த, சௌகரியமாய் இருந்த அவ்விடத்தில், வாழ்ந்த மக்களின் வாழ்க்கையோ நரகத்தைப் போல் இருந்தது. ஆம் ஆண்டவர் மனிதன் சமாதானமாய் சகலத்தையும் ஆண்டு வாழவே இப்பூமியை கொடுத்தார். ஆனால் அவனோ பொல்லாத வழியை தெரிந்து கொண்டது நிமித்தம், தானும் கெட்டு, தனக்கு கொடுக்கப்பட்ட பூமியின் அழிவிற்கும் காரணமானான். மனிதனின் பாவத்தினால், அவன் மாத்திரமல்ல, அவனது வாழ்விடமும் அழிவிற்கு உட்படுகிறது. மனிதன் பாவத்தினால் நித்திய அக்கினியில் பங்கடைவதைப் போல, அவனது வாழ்விடமும் நித்திய அக்கினிக்கு இரையாகிறது.

ஆம், இன்று உலகம் முழுவதும் அறிவு பெருகியிருக்கிறது. செழிப்பான, சொகுசான வாழ்க்கை பெருகி இருக்கிறது. மனிதனுக்கு தேவையான அனைத்தும் பூமியில் இருப்பதைப் போல் காணப்படுகிறது. ஆனாலும் இப் பூமியில் வாழும் ஒரு மனிதன் கூட, தன் வாழ்க்கையில் பூமியின் பொருட்களினால் திருப்தியை அடையவில்லை. அதற்கு மாறாக மனிதன் இருதயமும், வாழ்க்கை முறையும் பொல்லாப்பினால் நிறைந்திருக்கிறது. **ஆதியாகமம் 6:5-7** வசனங்களில், **"மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. அப்பொழுது கர்த்தர்: நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின்மேல் வைக்காமல், மனுஷன் முதற்கொண்டு, மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம்பண்ணுவேன்; நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்றார்."**, நோவாவின் காலத்தில் எப்படி ஆண்டவர் மனஸ்தாபப்பபட்டாரோ, அதை போன்றதொரு காலம் தற்பொழுது பூமி முழுவதும் இருக்கிறது. சமாதான பேச்சு என்று உலக தலைவர்கள் ஒரு பக்கம் பேசிக் கொண்டிருக்க, மறுபக்கம் லட்சக்கணக்கானோர் மாண்டு போகின்றனர். மனிதனின் உயிருக்கு மதிப்பில்லாமல் போயிற்று. அதேபோல் நீதியுள்ள வாழ்க்கையும், பரிசுத்த வாழ்க்கையும் கூட, இவ்வுலகில் எவ்வித மதிப்பும் இல்லாமல் போயிற்று. **ஆதியாகமம் 18:20,21** வசனங்களில், **"பின்பு கர்த்தர் சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப்பதினாலும், நான் இறங்கிப்போய், என்னிடத்தில் வந்து எட்டின அதின் கூக்குரலின்படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லையோ என்று பார்த்து அறிவேன் என்றார்."**. ஆம், இன்று சோதோம் கொமோராவின் கூக்குரல் பூமி எங்கும் கேட்கப்படுகிறது. சோதோம் கொமோராவில் நடந்த காரியங்கள் இன்று பூமி முழுவதும் நடக்கிறது. அன்று லோத்து நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்டது போல், இன்று நம்முடைய இருதயமும், நாம் வாழும் இப்பூமியின் நிலை கண்டு வாதிக்கப்படுகிறது. அன்று எவ்வாறு சோதோம் கொமோராவின் மக்கள் லோத்துவுக்கு பொல்லாபு செய்ய நினைத்தார்களோ, அதைபோல் இன்றும் தேவ பிள்ளைகளை துன்புறுத்த, அவர்களை பாவத்திற்கு உள்ளாக தள்ள, பூமியில் உள்ள காரியங்கள் முற்படுகின்றன.

ஒவ்வொரு நாளும் நம்மை சுற்றி நடக்கும் காரியங்களை காணும் பொழுது, பூமி பரிசுத்தமாய் வாழ தகுந்த இடமாக இல்லாமல் போயிற்று என்பதை நாம் அறியலாம். எனவே அன்று சோதோம் கொமோராவின் அழிவிற்கு ஒரு நாளை குறித்த ஆண்டவர், இப்பூமியின் முடிவிற்கும் ஒரு நாளை குறித்து இருக்கிறார். ஆனால் அதற்கு முன்பாக, **"கிழக்கு வெளுக்கும்போது அந்தத் தூதர் லோத்தை நோக்கி: பட்டணத்திற்கு வரும் தண்டனையில் நீ அழியாதபடிக்கு எழுந்து, உன் மனைவியையும், இங்கே இருக்கிற உன் இரண்டு குமாரத்திகளையும் அழைத்துக்கொண்டுபோ என்று சொல்லி, அவனைத் துரிதப்படுத்தினார்கள். அவன் தாமதித்துக்கொண்டிருக்கும்போது, கர்த்தர் அவன்மேல் வைத்த இரக்கத்தினாலே, அந்தப் புருஷர் அவன் கையையும், அவன் மனைவியின் கையையும், அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள்." (ஆதியாகமம் 19:15,16).** இங்கு லோத்தை கரம் பிடித்து தூதரைக் கொண்டு காப்பாற்றினது போல், ஆண்டவர் தம் கரத்தை நீட்டி நம்மை தம்மண்டை சேர்த்துக் கொள்வார். எனவே இவ்வுலகில் நடக்கும் பொல்லாப்புகளை கண்டு, பொல்லாத மனிதரைக் கண்டு, நாம் கலங்காமல் நம்மை மீட்டு ரட்சிக்க போகும், அவரின் நாளையே ஆவலோடு எதிர்பார்த்து இருப்போமாக.

இதனை ஆண்டவர், **மத்தேயு 13:24-30** வசனங்களில், **"வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோகராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. மனுஷர் நித்திரைபண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான். பயிரானது வளர்ந்து கதிர்விட்ட போது, களைகளும் காணப்பட்டது. வீட்டெஜமானுடைய வேலைக்காரர் அவனிடத்தில் வந்து: ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா? பின்னை அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள். அதற்கு அவன்: சத்துரு அதைச் செய்தான் என்றான். அப்பொழுது வேலைக்காரர்: நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமா? என்று கேட்டார்கள். அதற்கு அவன்: வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு, இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள். அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி: முதலாவது, களைகளைப்பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார்."**, உவமையின் மூலமாக விளக்குகிறார். அதன் அர்த்தத்தையும் ஆண்டவர், **மத்தேயு 13:36-43** வசனங்களில், **"அப்பொழுது இயேசு ஜனங்களை அனுப்பிவிட்டு வீட்டுக்குப்போனார். அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: நிலத்தின் களைகளைப்பற்றிய உவமையை எங்களுக்கு வெளிப்படுத்தவேண்டுமென்று கேட்டார்கள். அவர் பிரதியுத்தரமாக: நல்ல விதையை விதைக்கிறவன் மனுஷகுமாரன்; நிலம் உலகம்; நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர்; களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர்; அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு; அறுப்பு உலகத்தின் முடிவு; அறுக்கிறவர்கள்**

**தேவதூதர்கள். ஆதலால், களைகளைச் சேர்த்து அக்கினியால் சுட்டெரிக்கிறதுபோல, இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும். மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.“**, தம்முடைய சீஷர்களுக்கு வெளிப்படுத்தினார். ஆம், களைகள் உள்ள உலகத்தில்தான் நாமும் இருக்கிறோம். ஆண்டவர் அறுவடைக்கு என்று ஒரு நாளை குறித்திருக்கிறார், அன்று நாம் ஆண்டவருடைய களஞ்சியத்தில் இருப்போம். களைகளோ அக்கினியில் சுட்டெரிக்கப்படும். எனவே தற்போது இருக்கும் இவ்வுலக சூழ்நிலையை கண்டு நாம் கலங்காமல், ஆண்டவரையே சார்ந்திருப்போம். அழிவுக்கு தப்புவிக்கபடுவோம். ஆமென், அல்லேலூயா.